## “காடெல்லாம் வாசம் ஊரெல்லாம் பேசும்- இப்படிக்கு கறுவா”

உண்மை கறுவா இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டது பொதுவாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் இது நன்கு வளரக்கூடியது. இலங்கையை பொறுத்தவரையில் கண்டிஇ மாத்தளைஇ ஹப்புதலை போன்ற பகுதிகளிலும் சிங்கராஜ வன பகுதிகளிலும் இந்த கறுவா பயிர் செய்யப்படுகின்றது. அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையில் சாதாரணமாக வீடுகளில் இது வளர்க்கப்படுகின்றது வர்த்தக நோக்கம் இல்லாவிட்டாலும் வீட்டுத் தோட்ட செய்கையாக இது பயிர் செய்யப்படுகின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இப்பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் அதிலிருந்து கறுவாப்பட்டை பெற்றுக் கொள்ளும் செயல்முறை ரீதியிலான பயிற்சி வகுப்புகளும் விவசாயிகளுக்கு நடைபெற்று வருகிறது. தேவையான தரமான கறுவா நடுகைப்பொருட்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

### கறுவா பயிர்ச்செய்கை.

இலங்கையில் எட்டு வகையான கறுவா இனங்கள் காணப்படுகின்றன. ஊinயெஅழஅரஅ ணநலடயniஉரஅ டீடரஅந எனும் இனம் வர்த்தக ரீதியில் செய்கை பண்ணப்படுகிறது. கறுவா பட்டையின் சுவையின் அடிப்படையில் பாரம்பரியமாக கறுவா 7 வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது “பனிமிரிஸ் குருந்து” என்பது மிகவும் இனிப்பு சுவை கூடிய கறுவா ஆகும்.

### மண் மற்றும் காலநிலை தேவைப்பாடு.

வெவ்வேறு வகையான மண்களில் இது வளரக்கூடியது. கறுவா பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஆழமான மண் தேவையாகும். வருடாந்த மழைவீழ்ச்சி 1700 மில்லிமீற்றரிலும் அதிகமாக இருத்தல் வேண்டும் வெப்பநிலை 25-32 பாகை செல்சியஸ் ஆக இருத்தல் வேண்டும். இது பூரண சூரிய ஒளி விரும்பி தாவரம் ஆகும்.

கறுவா பயிர்ச்செய்கைக்கு ஈர வலயம் மிகவும் பொருத்தமானது. ஆனால் இடை வலயத்திலும் உலர் வலயத்திலும் செய்கை பண்ண முடியும்.

**பயிர் ஸ்தாபித்தல்.**

கறுவா அதிக அளவில் விதையின் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. தண்டு துண்டத்தின் ஊடாகவும் பதிய முறையில் இனப்பெருக்கம் செய்யலாம்.

நன்கு பழுத்த விதைகள் தெரிவு செய்யப்பட்டு அதன் மேற்றோல் அகற்றப்பட்டு நன்கு கழுவி விதைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.அதன் பின்னர் விதைகளை 12.5cm × 20 cm அளவுடைய பொலித்தீன் உறையில் நடுகை செய்ய வேண்டும. பொலித்தீன் உறையில் 5 தொடக்கம் 8 விதைகளை நடலாம். 4 தொடக்கம் 5 வீரியம் உள்ள தாவரங்களை வைத்துக்கொண்டு ஏனைய தாவரங்களினை ஐதாக்குதல் வேண்டும்.

கள நடுகைக்கான நடுகை இடைவெளி 120 cm × 90 cm ஆகும. பருவ காலம் ஆரம்பிக்கையில் நடுகை மேற்கொள்ள வேண்டும.. 30 cm × 30 cm அளவுடைய நடுகை குழிகளை தயார் செய்தல் வேண்டும். பின்னர் மேல்மண் இஎருஇ கூட்டெரு சம அளவில் கலந்து நடுகைக்குழிக்கான ஊடகக் கலவையை தயார் செய்தல் வேண்டும் . ஆரோக்கியமானதாக நோயற்றதாக இருக்கின்ற நான்கு மாத வயதினை கொண்ட தாவரங்களை நடுகை செய்தல் வேண்டும்.

**பயிர் முகாமைத்துவம்.**

அறுவடை செய்த பின்னர் அதிலிருந்து புதிய தளிர்கள் உருவாவதற்கு அதிக போசணைப் பொருட்கள் தேவைப்படுவதனால் அறுவடை செய்த பின்னர் பசளை இடுதல் வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட உரக்கலவையின் அளவு 900 kg/ha/yr ஆகும். வருடம் ஒன்றில் இரண்டு தடவை பசளை இடுதல் வேண்டும் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் களைக் கட்டுப்பாடு செய்தல் வேண்டும் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் தாவரத்தினை கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் செயல்முறைக்கு உட்படுத்துதல் வேண்டும். தாவரத்தின் தண்டு மிகவும் நீண்டதாகவும் நேர்கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**வீட்டிலே கறுவாப்பட்டையினை பதப்படுத்துதல் எவ்வாறு.?**

**பயன்படுத்தப்படும் உபகரணங்கள்.**



**கத்தி**



**“கோக்கத்த”**



**பித்தளை கம்பி**




**சத்தகம்**

கறுவா மரமானது நடுகை செய்யப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் அறுவடைக்கு தயாராகின்றது. வருடத்திற்கு இரண்டு தடவை அறுவடையினை பெற்றுக்கொள்ள முடியும்.

- ❖ அறுவடைக்கு தயாரான தண்டுகள் கீழ்வரும் இயல்புகளை கொண்டிருக்கும்.
- ❖ தண்டு பழுப்பு நிறமாக மாறும்
- ❖ தண்டின் விட்டம் 3-5 cm ஆக இருத்தல் வேண்டும்.

அறுவடைக்கு தயாரான தண்டுகளை தாவரத்திலிருந்து அறுவடை செய்தல் வேண்டும். அறுவடை செய்யப்பட்ட தண்டிலிருந்து கிளைகளும் இலைகளும் அகற்றப்படுதல் வேண்டும். பின்னர் தோற்பட்டையினை சீவுவதற்கு முன்னர் புறத்தோலினை சுரண்டுதல் வேண்டும். இதற்காக “கோக்கத்த” (kokaththa) எனும் விசேட வகை கத்தி போன்ற உபகரணம் பயன்படுத்தப்படும்.

புறத்தோல் சுரண்டி முடிக்கப்பட்ட பின்னர் தண்டானது பித்தளைக்கம்பியினால் நன்கு உரசி தேய்க்க வேண்டும். தண்டிலிருந்து பட்டையினை சற்று தளர்த்துவதற்காக இச்செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு பட்டை தளரும் சந்தர்ப்பத்தில் இலகுவில் பட்டையினை பொறிமுறை சேதாரம் இன்றி வேறாக்கலாம். பின்னர் விசேட வகை கத்தியினை பயன்படுத்தி பட்டையினை தண்டில் இருந்து உரித்து எடுக்க வேண்டும் சீவப்பட்ட பட்டைகளை நேரடியாக சூரிய ஒளியின் கீழ் உலர்த்தாது நேரடியாக சூரிய ஒளி படாத கட்டடத்தினுள் வைத்து உலர்த்துதல் வேண்டும்.

**குறிப்பு**- தண்டானது அறுவடை செய்யப்பட்ட அன்றைய தினமே பட்டையினை உரித்தல் வேண்டும்.


ஆக்கம்:
லி.துமிலன்
பண்ணை முகாமையாளர்
மாவட்ட விவசாயப் பயிற்சி
-நிலையம்
ஒட்டுசுட்டான்

ஆலோசனை வழிகாட்டல்:
திருமதி யாமினி சசீலன்
பிரதி மாகாண விவசாய
-பணிப்பாளர்
முல்லைத்தீவு







